
www.tamilarangam.net

மலர்-2




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சஞ்சீவி

மலர்-2

ஆவணி - 1989.

அட்டைப்பட விளக்கம்.
குமுறும் கடல் சென்று குவலயத்தின் பசி தீர்ப்போர்
-T. சௌந்தரி.

இம் மலர் ஹொல்ஸ்ரபுரோ தமிழ் - டனிஷ் நட்புறவுச் சங்க பத்திரிகைக் குழுவினரால் வெளியிடப்பட்டது.

உங்கள் ஆக்கங்களைத்தும் எதிர் வரும் புரட்டாதி பதினைந்தாம் திகதிக்கு முன்பாக கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## உள்ளடக்கம்


ஆசிரியர் பக்கம்.
திருக்குறள் விளக்கம்.
வாசகர் அரங்கம்.
நிகழ்வுகள் நகர்கின்றன.
குறுக்கெழுத்துப் போட்டி. இல:2.
ஏன் இந்த அவலம். (திரி-சிந்தி)
போராடும் குர்டிஸ்தான்.
" " (Dansk).
சஞ்சீவியின் பக்கம்.
சிறுவர் அரங்கம்.
சிந்தைக்கு விருந்து.
கோலக்காட்சி.
சந்தேகம்.
தமிழர்-டனிஷ் நட்புறவுச்சங்கம்பற்றி
இதழ் 1ன் இறுதி இதழின் அட்டைபட- விளக்கம்.


"CHANCHIVE", Tamilsk Dansk Venskabsforening,
Danmarksgade-10,7500 Holstebro,Danmark.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியர் பக்கம்

ஆரம்ப நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியால் பத்திரிகைக் குழுவில் அங்கம் வகிப்பவர்களது ஆக்கங்கள் கூடுதலாக இடம் பெற்றன. மற்றும் விடயங்கள் வேறு நூல்களில் இருந்து பிரதி செய்து எடுக்கப்பட்டவையாகும்.

எமது முதல் வெளியீட்டின் பின்னர் வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வந்து சேர்வதையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம். இவ்வாறுவரது ஆர்வமான இத்துறைகளை வளர்ச்சியடையச் செய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சிற்றிதழ் நூல். பெரியோர், சிறியோர் அனைவரும் மேற்போக்காக இந்நூலைத் திறந்தால் மிக்கவர்களாக உருவாவதற்கு இந்நூல் மேலும் சிறப்பித்திடுமானால் சந்தர்ப்பங்களை பயன்படுத்தவேண்டும் என்பதே எமது விருப்பம்.

குறுக்கெழுத்துப் போட்டி வாசகர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளது. இதில் ஆர்வம் காட்டும் தன்மை மற்றும் ஏனைய அம்சங்களிலும் ஏற்படுவது மிகவும் அவசியம்.

வாசகர்களிடமிருந்து சஞ்சிகை பற்றிய அபிப்பிராயங்களைக் கோரியிருந்தோம். அதன் பிரகாரம் பெறுமதிக் கருத்துக்கள் எழுதி அனுப்பிய வாசகர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

முதலாவது இதழின் முன்னுரையில் கட்சி, மதம், இனம், மொழி சார்பு இல்லாத ஆக்கங்கள் என்று குறிப்பிட்டிருந்தோம். மக்களது கருத்துக்களை உதாசீனம் செய்து வெறுமையான பத்திரிகையை வெளியிடுவது எங்கள் நோக்கமல்ல. மதம், இனம், மொழி, கட்சி என்பன போன்ற விடயங்கள் பற்றி எழுதப்படும் ஆக்கங்களைக் குறித்து இவ்வுலகில், சிக்கலை ஏற்படுத்தா வகையில் சிறந்த ஆக்கங்களாக அமைய வேண்டும் என்பதே அதன் கருத்தாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாரபட்சமற்ற எமது பத்திரிகைப் பணிக்கு திறந்த இதயத்துடன் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆயிரம் கருத்துக்கள் முட்டி மோதுவதன் மூலம் மக்களின் மனதில் சரியான ஆரோக்கியத்தை உருவாக்க இனது கருத்துக்களை திறந்து விடும் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு சகல விதமான ஆக்கங்களையும் உங்கள் பின்னடிப்புக்களைக் கைவிட்டு எழுதுவதன் மூலம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஆசிரியர்குழு.



பாரதியார் தான் நடத்திய "இந்தியா" என்ற பத்திரிகைக்கு தமக்கே உரித்தான பாணியில் சந்தா விகிதங்கள் நிர்ணயித்தார். அதாவது தமது பத்திரிகை வாங்குவோரின் பணவசதிக்கேற்ப நிர்ணயம் செய்தார்.

எல்லா ஜமீந்தார்களுக்கும் இராஜாக்களுக்கும் ரூபா.50. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ரூபா.30. ரூபா 200க்கு மேற்பட்ட வருமானம் உடையவர்களுக்கு ரூபா.15. மற்றவர்களுக்கு ரூபா.3.

ஆனால் "சஞ்சீவி" தனது நடைமுறைச் செலவுகள் காரணமாக அதை அடுத்த இதழிலிருந்து 15 ரூபா என்பதை அறியத்தருகின்றது.

- பத்திரிகைக்குழு -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருக்குறள் விளக்கம்.

"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை; மற்று
எல்லாம் குறிஎதிர்ப்பை நீரது உடைத்து."

**பதவுரை:-**

வறியார்க்கு – ஏழைகளுக்கு. ஒன்று – ஒரு பொருளை.
ஈவதே – கொடுப்பதே. ஈகை – ஈகையாகும்.
மற்று எல்லாம் – வேறு கொடைகள் எல்லாம்.
குறிஎதிர்ப்பை – பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும்
நீரது – தன்மையாய். உடைத்து – உடையதாகும்.

**விளக்கவுரை:-**

பதில் உதவி செய்ய முடியாத ஏழைகளுக்கு
கொடுப்பதுதான் ஈகையாகும்.

அறத்துப்பால்.
குறள் இல: 1 (ஒன்று).

---

ஓர் அரசனுக்கு வேடிக்கையான எண்ணம் தோன்றியது.
ஒருவனிடம் ஒரு வளமான பெரும் நிலத்தைக் காட்டி
நீ எவ்வளவு தூரம் ஓடுகிறாயோ அவ்வளவும் உனக்கே
சொந்தம் என்றான். பேராசை மிகுந்த அந்த மனிதன்
ஓடத் தொடங்கினான். ஓட ஓட இன்னும்
கொஞ்சம் ஓடலாம் போலத் தோன்றியது.
தொடர்ந்தும் ஓடினான். இறுதியில் மாரடைப்பால்
செத்தான். அவனைப்
புதைப்பதற்கு ஆறடி நிலமே போதும்.

ஓர் அறிஞர்..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் அரங்கம்

செல்வி. ஜெயந்தி.
மட்டக்களப்பு,
இலங்கை.

சஞ்சிகை மலரில் இடம் பெற்றுள்ள பெண்மை ஆக்கம் மிகவும் பாராட்டுக்குரியதே. சிறப்பாக 'இதுதான் நாகரீகமா' என்ற அம்சம் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளது. 'விழுதுகள் வேர்க்கின்றன' என்னும் தொடரின் முடிவை அறிந்து கொள்ள எதிர்பார்க்கிறேன். ஆசிரியர் குழு அவர்களுக்கு எனது நன்றி. "இனிக்க 'இனிக்க!" பகுதியில் வெளிவந்த "யாரின் தவறு", என்னும் அம்சம் பாராட்டுக்குரியது. இதன் ஆக்கத்திற்குரிய பிரசி அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

திரு. சிறிநாதன்
KLOSTER VEJ
7500 TVIS.

இதழில் வந்த சகல அம்சங்களும் சிறப்பாக இருக்கின்றன. இன்னும் சிறிய சிரிப்புத் துணுக்குகள், சின்ன சம்பவங்கள், கேள்வி பதில்கள் போன்றவற்றை இனிவரும் மலர்களிலும் எதிர்பார்க்கிறேன்.

திரு. V. ஜீவனேசன்.
ROSKILDE.

தங்களது சஞ்சிகை வெளியீடு பற்றிய அறிக்கைகள் பெரிதும் இடம் பெற்றது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. இலக்கிய பொற்கிழடன், பேருண்மைகளின் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு வெளியிடப்பட்ட சிறுவர் பகுதி அருமை.

உங்கள் சஞ்சிகையில் என்னையும் ஓர் சந்தாதாராக இணைத்து கொள்ள விரும்புகிறேன். அது பற்றிய விபரங்களை அறியத்தரவும்.

---

கடிதங்கள் அனுப்பிய வாசகர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

இன்னும் சிலரின் வேண்டுகோள்களின் பூர்வம் கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

Øreknen Sahara er med et areal på 8.417.-000 km$^2$ over tre gange større end Middel-havet.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(கடந்த இதழின் சுருக்கமும் தொடர்ச்சியும்)

எத்தனையோ அழகான காட்சிகளைச் சேர்த்து அமைதியாக சிதைக்கப்பட்டுக்கொண்டிருந்த அந்தக் கிராமத்தில், ஆதவனும் அவனது நண்பர்களும் ஊரின் பல நல்ல மக்களின் ஒத்துழைப்புடன், இக்கட்டான சூழ்நிலைகளிலும் அமைத்த நூல் நிலையத்திறப்பு விழா தொடர்பாக பொதுமக்களின் கருத்தாக்கங் பாபுவு அண்ணா என்பவரின் எத்தனிப்புகளும் வெளிப்பட்டிருந்தது.

★ ★ ★

வீட்டுக்கு வந்து தேனீர்ப்போத்தலைத் தேடியவனுக்கு ஏமாற்றமாயிருந்தது. கண்களை அகல விரித்தபடியே, ஏ..... என்று வாயைத்திறந்தவன் வாயை மூடி மகிழ்ச்சியுடன் தாயினருகே போனான்.. அந்தப் போத்தலை தாயார் எடுத்து தேனீர் கொடுத்துக்கொண்டிருந்தார்.

ஆதவனால் யோசிக்காமலிருக்க முடியவில்லை-

தம்பி ஆதூ ...... (இது ஆதவா என்பதின் செல்லச் சுருக்கம்) கூடையை எடுத்துக்கொண்டா, என்றவாறு தாயார் படலை நெருங்கினார். ஆதவன் வாடிக்குள் சென்று கூடையை -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுந்துக் திரும்புவதற்குள் ஏதோ வாய்ச்சண்டைச் சத்தம் கேட்டு கூடையுடன் ஓடிவந்தாள். ஆதவனுக்கு விசர் பிடிப்பதுபோல் இருந்தது. தாய்களையும், சந்தையிலயாரிலையெல்லாம் வெடிடுபுக்கில் கொண்டிருந்தனர்.

அம்மா, அம்மா என அலறுமாகக் கூப்பிட்டான். மீ... மீன் படிச்சவள் வந்திட்டாள், இவ்வளவு காலமில்லை வாய்திறக்கேலாது, நான் வாய் திறந்தால் அவனுக்கு மானம் போகுதாம் என்றவாறு காரவளைப் பார்த்தான். அவளும்: அம்மா இப்பா.. வொடியன் சொருக்கு மேனை வாத்திட்டுதுகள், நாங்கள் என்னத்திலேயும் அரவா இருக்கேலாதும், உனக்கெல்லாம் அவங்கட நெஞ்சங்கள்... என்றபோதே அவ வெட்டிப்பாம்பு போல் மடங்கிவிட்டா.

ஆதவன் மீண்டும் கரையடிக்கு வந்தபோது பெரும் அலையடித்து ஓய்ந்த அமைதி தெரிந்தது.

என்ன செல்லம்மாக்கா வழமை போல உன்ரை மீன்கொள்ள இல்லையே. கடவுளே! என்னெண்டாலும் செல்லம்மாக்கா, அம்மா சண்டைபிடிக்கிறாளும் வீட்டையிருந்து கவலைப்படுவா.

காசுக்கித்தம்பி நீதான் பொறுப்பு எக்கோளைக், நான் தந்திடுவன்... இது செல்லம்மாக்காவின்ரை அன்பு.

. . . . .

பெத்தமனம் பித்து, பிள்ளைமனம் கல்லு என்பதுபோல் கனகத்தால் கவலையைப் பொறுக்கமுடியவில்லை.
கரையடியில் மகன் ஆதவனைக் கடிந்து பேசிவிட்டேனோ என்ற ஏக்கம் எங்கேயும் அவளின் அன்பான நெஞ்சத்தில் இழையோடிக்கொண்டிருந்தது..

என்ரை பிள்ளை படிச்சவன், சோதினையும் எழுதிப்போட்டான், என்னும் முடிவைக் காணேல்லை. விளையாக் கிழையா வந்தொன்டால், அவன் மானமெண்டு இருந்தியாடில்லை. இப்படியொரு தனியான மதிப்பு மரியாதையை அந்தக் குடும்பம் மட்டுமல்ல சுற்றத்தாரும் ஆதவனின் மாமன்மீது வைத்திருந்தது. அவர்களுக்கு வேலைப்பளு அதிகம், மீன்பாடு கூடப் பட்டதால் மனதைக் கைவைத்து வேலியில் நீட்டினாள்.

. . . .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரம் நண்பகலைத்தாண்டியிருந்தது.

ஆதவனின் கண்கள் எங்கோ அலைந்து கொண்டிருந்ததை அவதானித்த தந்தை: ஆதவா....! உனக்கு இந்த வேலைகள் சரிவராது பழக்கங்குறைஞ்ச வேலை, கஸ்டமாயிருக்கும். கடும் வெய்யிலாக்கிடக்கு நீ வீட்டுக்கை போ. என்றார்.

ஆதவனின் விழிகள் வேலையல்ல சுலோசனாவை தேடிக்கொண்டிருந்தது.

வாடி வேலையளை அண்ணை செய்து போட்டுது ஐயா! என்றவனுக்கு தகப்பன் சொன்ன பதில் இரண்டுவிதமாகப் பட்டது.

இனியென்ன ஊர் வேலையள் தானே. சாப்பிட்டிட்டுப் போ. இது ஒருவகையில் அவனுக்கு தந்தையின் மறைமுக ஆதரவாகவே பட்டது. ஆயினும் நண்பர்களைக் காணாதது அவனுக்கு அன்னியப் பிரதேசத்தில் மாட்டிக்கொண்டது போலிருந்தது.

கண்ணன், வேதநாயகம் இருவரும் தெருவில் நின்று சைகை காட்டியதை அவதானித்த அண்ணன் ஒரு வித உதவியாய் சொன்னான்.

டேய் தம்பி! நீ செய்த வேலை போதும் வெய்யிலுக்கை நிக்காதை. வாடி வீட்டுக்கை போ. புரிந்து கொண்ட ஆதவன் இடத்தை விட்டு நழுவிக் கொண்டான்.

வலைக்குருவி சத்தம் மட்டும் லேசாக அலையோசையுடன் கேட்டுக்கொண்டிருந்தது.

பார்த்தமட்டில் அந்த இரு நண்பர்களும் ஏதோ கவலையுடன் கலந்திருப்பதையுணர்ந்த ஆதவனுக்கு பெரும் சங்கடமாயிருந்தது. வேதநாயகம் விடயத்தை விளக்கிய பின்பே தன்னைச் சமாளித்துக் கொண்டான்.

மூவரும் வாடியடி வலைக்கிடங்கில் சாய்ந்திருக்க வேதநாயகம் மட்டும் பதிவு நாடா போல் நின்று விடாமல் சொல்லிக்கொண்டிருந்தான்.

புலோமிநாதர், அவர்தான் தேவாலயத்தடி கோயிலுக்கு வாறவையளுக்கெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார். இது இவருக்குத் தேவையோ!

இப்படிப்பட்ட பிரிவான பேச்சுக்கள், இந்தமான சிந்தனைகள் மக்கள் மத்தியில் பரப்பப் படுகின்றன

அந்த அழகிய கிராமத்து இளைஞர்கள் மத்தியில் அவன் 9

www.tamilarangam.net

இந்துவா இவன் கிறீஸ்தவனா என்ற வேறுபாடு அறவே இல்லாமற்தான் இருந்து வந்தது. எவருமே அப்படி எண்ணியதே கிடையாது. ஆனால் இன்று....

வெளியே அமைதி நிலவுகையிலும் உள்ளூர ஏதோ மின்னல் வெட்டித் தோன்றி மறைந்தது போலிருந்தது. அவர்களது வேலைக் களைப்பை விட அந்த இரண்டு நிலங்களின் பட்டங்களை நினைத்து என்னதே செய்வது என்பதறியாது திகைத்துப் போயிருந்தார்கள்.

அமைதியைக் கெடுப்பது போல், கணேசன் ஏதோ சொல்லமுன் வந்தவன் விடுத்து, "ஆதவா ஆனந்தம் மாமா கொழும்பிலையிருந்து வந்திட்டார். அவரோடை இந்தப் பிரச்சனை பற்றி கதைச்சாலென்ன... இது அவனுடைய கருத்து.

சோகத்துக்கு என்ற களைப்பாயிருந்ததும் தம்பியார் ஆனந்தம் கொழும்பிலிருந்து வந்ததையறிந்தும் அவனது மனதில் மகிழ்ச்சிக் களை வீசியது. உடனடியாக தம்பிக்கு ஏதாவது கொடுத்துவிட வேண்டுமே என்பதற்காக ஆதவனைத் தேடி வாடிக்கு வந்தான்.

"தம்பி ஆது! இவன் மாமா கொழும்பிலிருந்து வந்திட்டானாம், உன்ரை மாமியும் கூடப் பட்டவள் தம்பி, கடற்கரைக்குக் கூட வரமாட்டாள். இந்த பாரை மீனைக் கொண்டுபோய் குடுத்திட்டு வாப்பு.

இது ஆதவனுக்கு கிடைத்த நல்ல சந்தர்ப்பம். கணேசன் கூறிய கருத்து மிகவும் நன்றாகவே இருந்ததால் வேகமாக மீனையும் எடுத்துக்கொண்டு மாமா ஆனந்தம் வீட்டுக்குச் சென்றும் ஆதவன் மட்டும் உள்ளே போனான்.

மாமி! அம்மா மீன் தந்தவ குடுக்கச் சொல்லி. மாமா கொழும்பிலை வந்திட்டாராம், எங்கையாம் மாமா! வரேக்கை வழியிலை ஒரு பிரச்சனையும் இல்லையாமே! ஒண்டும் சொல்லேல்லையே மாமா! என சங்கிலித் தொடரான கேள்விகள் மாமியை வாயெடுக்கவிடாத அளவுக்கு ஆதவன் கேட்டுக்கொண்டிருந்தான்.

ஆதவா! அந்தக் கம்பீரமான மாமாவின் குரல் வந்த திசையை நோக்கினான். அவரின் குரலைக் கேட்டதும் ஆதவனுக்கு ஏதோ தாக்கியெறிந்து போட்டது. மாமாவுடன் கதைக்க இவ்வளவோ நேரம் பற்றி ஏதாவது கேட்டாரென்றால்.... பயம் இல்லை வாறு கோயுக்கு வந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னடா இவ்வளவு காலமும் எங்கள சோற் முழிஞ்ச வாலிகளையைக் கட்டி முடிக்கும்வரை திரும்பியே பார்க்காத கூட்டம் இப்ப படம் வைக்க ஓடித்திரியினமாம். என்ன செய்யப் போறியள்.

ஆதவனின் மனதுக்குள்ளிருந்த பயம் எப்ப-டி நீங்கியதோ தெரியவில்லை. அவனுக்கு இச் சந்தர்ப்பம் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலிருந்தது.

அதுதான் மாமா உங்களோட-கதைக்கவெண்டு வந்தனான். என்னோட கணே-சும், செல்வமும் வந்தவங்கள்; படலைக்கு நிக்கிறாங்கள்.

ஏன் அவங்களை நீ உள்ளே கூட்டி வரேல்லை. நீதான் என்ரை அக்கா மகனை; அவங்-களும் என்ரை மருமக்கள்தான். அவங்களைப் படலை-யிலை விட்டிட்டு வாறது கூடாது. அவங்களையும் உள்ளுக்கை வரச் சொல்லு.

இந்த நல்ல மாமாவுக்கு ஏன்தான் ஒரு குழந்தையும் இல்லை, பாவம்! என மனதுக்குள் நினைத்-தவாறே ஆதவன் தனது நண்பர்களைக் கூட்டிவந்தான்

மூவரும் வராந்தாவின் வாயிலில் அம-ர்ந்திருந்தனர், மாமா ஏதோ யோசித்தபடி வந்தவர்-எல்லோரையும் பார்த்துச் சிரித்தார்.

என்னடாப்பா யோசிக்கிறியள். ஒன்-றுக்கும் யோசிக்காதேங்கோ. "கடியள் எப்போதும் தாங்-களாக வளையாது, நாங்களாகத்தான் வளைக்கவேணும் சரியோ. நான் யேசு படமும், சாய்பாபாபடமும் வாங்கித் தாறன் வாசிகசாலைக்குள் வையுங்கோ. என்ன

அவையுங்கள் மனிதனைப் புனிதப்படுத்-தும் புனிதமான இடங்கள். எந்த மதமும் மற்றவனை கட்டிவிட்டு கூத்துப் பார்க்கச் சொல்லிச் செல்லே-லை; இவங்கள் இதை தங்களுக்கு சாதகமாகப் பயன் படுத்தி இலாபகாய நினைப்பவங்கள். இவங்களுக்கு இடம் கொடுத்து நடக்கக்கூடாது.

வேலுக்கும் தாளமுடியாத சந்தோ-ஷம். எதுவித பிரச்சனையுமின்றி நூல்நிலையத்தைத் திறப்புவிழாக் கொண்டாடியது போலிருந்தது.

இப்போ மாமா கதையைத் திசை-திருப்பினார். இவையும் நடக்குது. என்னமாதிரிப் பிட்டை-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடிவுகள். ஆ! மேலும் ஏதோ இடி விழுந்தது போன்ற பிரமிப்பு உண்டானது.

முடிவென்றும் வரேல்லே. நாங்கள் நல்லா எழுதினனாங்கள் ...

சரி வெய்யிலுக்கு தேசிக்காய்த் தண்ணி நல்லாயிருக்கும் குடியுங்கோ. கனக்க வெக்கப்படாதே குடி.

நாங்கள் உண்ட வலைக்குப் புரியாமல் - திறப்பு விழாத் தினம் திடீரென வந்து நின்றது போலிருந்தது.

கிராமத்துச் சனங்கள் அன்றைய விசேட நிகழ்ச்சிகளை காண்பதற்காக முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள். மக்களிடமிருந்து கவியரங்கம், நாடகம், பாட்டு நிகழ்ச்சிகளும் அரங்கேறியிருந்தன.

பாபு அண்ணர் என்றும் போல் இன்றும் தூயதும் காற்சாரம் நூல் வேட்டியத்தை போட்டுக்கொண்டிருந்தார். முதல் அவரின் கண்ணில் பட்டது சரஸ்வதிப் படம் மட்டுமே, அவ்வளவுதான் பாபு அண்ணரைச் சொல்லவா வேண்டும். அவர் மனம் தப்புக்கணக்குப் போட்டது.

இந்தக் கோவிலடியார் இப்படித்தான் - காலமெல்லாம் காலை வாரிப் போட்டார்கள். இனி இவர்களை நம்பவும் கூடாது, என்றவாறு தனது விரதம் தன் காலுக்குள் குத்தியது போலிருந்தது. சரஸ்வதி படத்துக்கு எவ்வளவு இடம் ஒதுக்கப்பட்டு அழகாக அமைக்கப்பட்டிருந்ததோ, அதே போல் யேசு படத்துக்கும் அழகாகச் செய்திருந்தனர்.

கோவிலும் தேவாலயமும் படிப்பகத்தான் பின்னுக்கும், இறைவனை தேவன் என்பதை இந்தச் சிறுசுகள் விளங்குவது போலச் செய்த காரியத்தை புரிந்து கொள்ளாமல் நான் தப்புக்கணக்கு போட்டேன். தன்னைத்தான் கடிந்தவாறு நிகழ்ச்சி நடக்கும் இடம் நோக்கி நடந்தார் பாபு அண்ணர்.

யாரோ தெரிந்தவர்கள் இருப்பதுபோலத் - தெரியவே பாபு அண்ணர் முகத்தை நீட்டிப்பார்த்தபோது - தான் கோவிலடி, தேவாலய அடியார்கள் சேர்ந்திருந்து கோப்பி பொரி சாப்பிட்டுக்கொண்டிருந்தது தெரிந்தது.

இந்த வாய்க்கெல்லாம் சோளம்பொரி தேவை தான், வாய்ப்பொரியிலே போட்டாலும். இது பாபுவண்ணரின் எரிச்சலும் வேதனையும் கலந்த உள்ளத்தின் புலம்பல்.

www.tamilarangam.net

அந்த இளசுகளின் விவேகம் மிக்க செயற்பாடுகள் பல இக்கட்டான நிலைமையிலும் விழாக்களை .. அது மிகவும் சந்தோசமானதுதான். பேரும் அன்புடன் விழாவைப் பார்க்க ஒன்றாக அமர்ந்திருந்தனர். ஆயினும் அவர்கள் மனது ஆதங்கப்பட்டுக் கொண்டே இருந்தது. இளமையிலே, ஒன்றும் தெரியாத வெளி இருக்கிறது. ஆதவன் வாயைத் திறந்து சொன்னான். ஸ்ரீ. டாவும் நாங்கள் மீண்டும் எப்ப சந்திப்பமோ தெரியாது என்றதை அவர் முகங்களிலும் ஏக்கம் தென்பட்டது.

எது எப்படியிருப்பினும் ஆதவனுக்கென்றொரு வாழ்க்கை அமைக்கப்பட்டுவிட்டது. அப்புடனிருந்தவனுக்கு கடிதத்தை இடையிலேயே கண்டபோது, ஒரு ஆனந்தப் பெருமிதம். கடிதத்தை உடைத்து வாசித்தவனுக்கு தூக்கிவாரிப் போட்டது. எவ்வளவு கஷ்டப்பட்டு அந்தப் படிப்பகத்தை ஒப்பேற்றி முடித்தனாங்கள். இன்றைக்கு வந்த இந்திராணுவம் உடைச்சுப் போட்டாங்கள்.

தொலைபேசி அழைத்தது, ரிசீவரை எடுத்தவனுக்கு யாரோ அன்புத்தொல்லை கொடுப்பது போல் இருந்தது. ரிசீவரை வைத்துவிட்டான். மீண்டும் அழைப்பு வந்தபோது, நல்ல பேச்சு கொடுக்கவேண்டுமென்பது போல் ரிசீவரை எடுத்தபோது ஆங்கிலத்தில் குரல் ஒலித்தது. Call from Srilanka, may I. talk with Athavan please...... என்றபோதுதான்-. Ja..ja என்றவாறு ஆதவன் குரல் கொடுத்தான்.


தலைவனின் குரல் மறுமுனையிலிருந்து கேட்கவே.. என்னண்ணை! சொல்லுங்கோ என்றவனுக்கு தலை அதிர்வது. உலகமே ஒரு கணம் நின்றது போலிருந்தது. என்ன மாமாவை இந்தியராமி சுட்டுப் போட்டாங்களோ? ஐயோ கடவுளே! என்ன அநியாயம் இது!! துக்கம் - அவனது தொண்டையை அடைத்துப் போட்டது. மாமாவும் போட்டார்; படிப்பகமும் போச்சு, அண்ணன் கட்டனாம் அந்த மாமாவை எப்படித்தான்.... மீண்டும் பார்ப்பது என நினைத்தபோது பேசமுடியாது திக்கித்து நின்றான்.

ஆதவன் இங்கு வாழ்ந்தாலும் அவனது கடந்தகால நிகழ்வுகள் மாமாவையும் படிப்பகத்தையும் சுற்றி நகர்ந்து கொண்டேயிருக்கிறது.

(முற்றும்) —சிவா—

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி 2
# KRYDS OG TVÆRS.



'சஞ்சீவி' உங்களுக்-
கா வழங்கும் குறுக்கெழுத்துப் போட்டி, இல, 2 இக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கிறது.

'சஞ்சீவி'க்காக நீங்கள்
செய்ய வேண்டியது குறுக்கெழுத்துக் கட்டங்களான வெற்
றிடங்களை கீழே கொடுக்கப்படும் இடமிருந்து வலம்,
மேலிருந்து கீழ் போன்ற கேள்விகளுக்குச் சரியான
விடைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியதே.
விபரங்கள் கீழே உள்ளன:-

கேள்விகள், (51 ம் பக்கம் பார்க்கவும்)

இடமிருந்து வலம்,

1. இவள் அகதியும் விளக்கேற்றி இப்பொழுதும் ஒரு அகதிய
பெயர் உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5. சிறந்த படங்களைத் தயாரிக்கும் "ஹொலிவூட்" படநிலையம் இந்த நாட்டிலேயேயுண்டு.
10, இளமைப் பருவத்திற்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.
15. ஒரு நதி இங்கு ஏனோ திரும்பி நிற்கின்றது.
22. இது தாம்பூலத்துக்கு முக்கியமானது.
26. கூட்டற் கணக்கு அடையாளத்தின் பெயர் இது ஆகும்.
34. தமிழகத்தின் பெரும் இராட்சியங்களில் மலையும் மலைசார்ந்த நாடும் இந்த மன்னனுடையதே.
39. இலங்கை மன்னன் இராவணனின் மனைவி பெயர் இதுவாகும்.
46. மண்பாத்திரத்தின் மறுபெயரான இது இங்கு வலமிருந்து இடமாய் மாறியுள்ளது.
53. சில ஆண்டுகளுக்கு முன்னர் திரைப்படத்துறையில் பெயர் சொல்லும் அளவுக்கு வாழ்ந்து வாயு அடைப்பு வெடித்த காரணத்தால் மரணமெய்திய இவர்களின் பெயர்கள் முன்றால் இப்பாதிப் பெயர் உண்டு.
55. பெருமரங்களின் தோலின் இப்படி அழைப்பர்.
59. நெல்மணியின் கோதிற்கும் இதுவே பெயராகும்.
62. "இல" வின் எதிர்ச்சொல் "—" இதுவாகும்.
64, இது தெருவிற் பொருள் மறைந்துள்ளது.
70. ஒரு வருடத்தை நான்கு இருதுக்களாக பிரிக்கப்பட்ட போதிலும் மக்கள் அதிகம் விரும்புவது வசந்த "—"மாகும்.
74. வித்தினை வந்தோர் இதனையே நாடுவர்.
79. கிணறு திறப்பதற்கான இதனை அதிகமாக தெருவிலிருந்தே பெறுவர்.

<u>மேலிருந்து கீழ்:</u>

1. தீ பாரிய விளைவினைக் கொடுக்கும் போது இந்தப் படையினரே உதவி புரிவர்.
2. நாக்குக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு
6. தேன் கூட்டிலிருந்து எடுக்கப்பட்ட தேன் வதைப் பின் இப்படி உபயோகமாகிறது.
7. முனிவர்கள் இப்பெயர் கொண்டும் அழைப்பர்.
9. பாலியல் வெறிபிடித்து அலைபவனை இப்படி அழைப்பர்.
1 மருந்துக் குளிம்பினை ஆங்கில உச்சரிப்பாளர் இதனையே நாமும் சாதாரணமாக பேச்சு வழக்கில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்த்திருக்கிறோம். ஆனால் இது தலைகீழாயுள்ளது.
23. இது ஓர் தோலிசை வாத்தியக் கருவி. ஆனால் இது இங்கு கீழிருந்து மேலாகவுள்ளது.
34. "கொழும்பு", "மெட்ராஸ்" போன்ற நகரங்களுள் அமைந்த தரமற்ற குடியிருப்புப் பகுதிகள் இப்படியே அழைப்பர்.
39. மனிதனுக்கும் முக்கியமாக தலைப்பகுதியில் வளர்கோதா-த. இங்கும் இதுவே இருக்கேயுள்ளது.
40, கோதுமை மாவிலிருந்து போறணை மூலம் தயாரிக்கப்படும் இதனை இலங்கையில் இப்படி அழைப்பர் கீழிருந்து மேலாகவுள்ளது.
42. திருவிளையாடற் புராணத்தில் மன்னன் செண்பகப்பாண்டியனின் மனைவியுடைய கூந்தல் பற்றி அரச அவையில் கவிபாடிய புலவனின் பெயர்.
47, உலோக வேலைகள் செய்யும் கருத்தியலெப்பு அமைந்த இந்த இடத்தின் இப்படியழைப்பர். ஆனால் குழம்பியுள்ளது.
53, அதிகமான மனிதர்களின் இந்தக் குணமே பல பிரச்சினைகளுக்கு ஆதாரமாயுள்ளது.
54. பெண்கள் காலில் அணியும் இந்த அணிகலனை சிலப்பதிகாரத்தில் முக்கிய இடம் பெறுகிறது.
59. மனிதகுலம் மகிழும் போது அவர்கள் முகத்தில் இந்தக் களை பொங்கும்.
70, மனித ஐம்புலன்களில் இதுவும் ஒன்று.

"தொடர்ச்சி"

மின்சாரத் தடையில்
சம்சார இடையதிர்ச்சி
அதனால்
ஐயிரண்டு திங்களில்
வெளியுலக இடப்பெயர்ச்சி
பால் மணம் மாறி
பூ மணக்கும் முதிர்ச்சி
மீண்டும் . . . .
மின்சாரத் தடையில் . . . . .

— தாமோ.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவனியுங்கள்!

குறுக்கெழுத்துப் போட்டி சம்பந்தமான விபரங்களும், நிபந்தனைகளும்:

1. சஞ்சீவி மாத இதழ் உறுப்பினர்கள் தவிர்ந்த யாவரும் பங்கு கொள்ளலாம்.
2. போட்டியில் பங்குகொள்வோர், கட்டங்களை நிரப்பியதையும், அத்துடன் சரியான முகவரியையும் தெளிவாக எழுதி, எதிர்வரும் 15.09.89 திகதிக்கு முன்னதாக, "Chanchive", K.T:2, Tamilsk Dansk Venskabsforening, Danmarksgade:10, 7500 Holstebro. என்ற முகவரிக்கு கிடைக்கும்படியாக அனுப்புதல் வேண்டும்.
3. வாசகர்கள் யாவரும் இப்போட்டியில் பங்குகொள்ளலாம், ஆனால் பத்திரிகையின் அசல் பிரதியே ஏற்றுக்கொள்ளப்படும்.
4. போட்டிமுடிவுகள் பத்திரிகைக்குழு நடுவரால் முடிவு செய்யப்படும்.
5. மேற்கண்ட விதிமுறைகளுக்கமையவும், சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்ட போட்டிக் கூப்பன்கள் சீட்டிழுப்பு மூலம் 1ம், 2ம், 3ம் பரிசுகளுக்கான தகுதியினைப் பெறும்.
6. போட்டி சம்பந்தமான நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
7. சரியான விடையும், பரிசு பெற்றோர் விபரமும் அடுத்த இதழில் வெளியாகும்.
8. பரிசுகள் உரியவருக்கு காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

<u>முக்கிய குறிப்பு</u>: சஞ்சீவியின் குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்பவர்கள், இதழில் இறுதிப் பக்கத்திலுள்ள தயாரான கட்டத்தாளினை ஒழுங்காக வெட்டி எடுத்து முத்திரை ஒட்டியும், அழகாக பெயர் முகவரியினை எழுதி அனுப்பி வைக்கும்படி உங்களை அன்புடன் எதிர்பார்க்கிறோம்.

நூலகத்தில் ஒரு வாசகர் கேட்டார்,
"பெண்ணை விட ஆண் அறிவாளி" என்ற நூல் எங்கே இருக்கின்றது.
நூலகத்தில் பணிபுரிந்த பெண் சொன்னாள்.
கற்பனைக் கட்டுரைகள் அடங்கிய ஏழாவது அலுமாரியில் கீழ்த்தட்டில் இருக்கின்றது.
– நன்றி முத்தாரம் –




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

"சஞ்சீவியின்" மலர்: 1 ன், குறுக்கெழுத்துப் போட்டி சம்பந்தமான விடைகளும்; சரியான விடைகள் எழுதியவர்களில் பரிசுகள் பெற்றுக் கொண்டோர் விபரங்களும்:

குறுக்கெழுத்துப் போட்டி (1)

KRYDS OG TVÆRS



இடம்-வலம்:

1. வணக்கம்.
7. பூந்தி.
15. மரகதம்.
19. படி.
42. [illegible].
50. [illegible].
57. உருப்பு.
46. தம்பு.
52. அழகம்.
57. புதுவைக்குளம்.
73. [illegible].
76. புதுமனை.

மேல்-கீழ்:

1. வண்டி.
2. பணம்.
7. பூதம்.
9. வருமதி.
15. கண்ணன்.
24. உண்மை.
30. கரும்பு.
35. [illegible] +
47. புதன்.
50. [illegible].
53. + பழம்.
54. குப்பி.
65. காடு.

1. வது பரிசினைப் பெற்றுக் கொண்டவர்
S. Suthakaran,
Fyensgade - 1.1,
7600. Struer.

2. வது பரிசினைப் பெற்றுக் கொண்டவர்:
R. Vasanth,
Valdpoulsens vej - 44,
7500 Holstebro.

3. வது பரிசினைப் பெற்றுக் கொண்டவர்;
S. Nirthika,
Grønnedal 48, S.t, T.H,
7600 Struer.

மேற்படி பரிசில்களைப் பெற்றுக் கொண்டவர்களுக்குரிய பரிசுப் பொருட்கள் காலத்திற்குள் சஞ்சீவியினால் அனுப்பி வைக்கப்படும், என்பதனையும் இப் போட்டியில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்ட சகல வாசகர்களுக்கும் நன்றியை "சஞ்சீவி" தெரிவித்துக் கொள்கிறது.

05-09-89 க்கு முன்னர் உங்கள் பெயர் மேல் விலாசத்தில் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Tamil Dansk Venskabsforening.
Danmarksgade - 10,
7500 - Holstebro.



"மேசைப் பந்தாட்டம்"

எதிர்வரும் 23, 24-09-89 திகதிகளில் கொல்ஸ்ரப்ரோ தமிழ் டெனிஷ் நட்புறவுச் சங்கத்தின் சார்பில் கைப்பந்தாட்ட மேசைப் பந்தாட்ட அந்தப் போட்டி ஒன்றை நடாத்த தீர்மானித்துள்ளோம். இதில் பங்கு பற்ற விரும்புவோர்.

www.tamilarangam.net

# ஏன் இந்த அவலம்?

சிரிக்கச் சிந்திக்க

எனக்கு இன்று ஓர் வித்தியாசமான உணர்வு. பிரத்தியேகமான சந்தோசம். இலங்கையிலிருந்து இங்கு வந்த ஒரு சிங்களக் கல்யாணத்தைப் பார்க்கப் போகின்ற சந்தர்ப்பம். அதனால் ஏற்படுகின்ற அலாதிப் பிரியம்.

"ஒரு மணிக்குத் தான் கல்யாணம் ஆனால் நீ அதிகாலையிலே இங்கு வந்து விட வேணும்" என்பது மாலினியின் அன்புக் கட்டளை.

ஏறக்குறைய எனக்கும் மாலினிக்கும் ஐந்து வருடகால நட்பு. ஏதோ ஒரு நாள் எதிர்பாராமல், சந்தித்தேன். தனித்துத் தனியாய் இருந்ததால் துணிவோடு கதைத்தேன். ... அவளும் ஒரு இலங்கையாள் என்பதும் தான் இங்கு வந்து ஏக்குறைய பதினைந்து வருடங்களுக்கு மேலாகி விட்டது என்றும் தான் இப்போது ஒரு டெனிஸ் நண்பரோடு குடும்பம் நடத்துவதாகவும் கூறிவிட்டாள்.

அன்றிலிருந்து நாமும் அவள் குடும்பமும் நல்ல நண்பர்களானோம். அவள் என்னை எப்போதும் Min மல்லி என்றே செல்லமாகக் கூப்பிடுவாள்.

அந்த மாலினிக்கு இன்று கல்யாணம்.

ஆமாம் அதிகாலை ஒன்பதுமணியிருக்கும்.. கல்யாணவீட்டில் ஏறக்குறைய மூன்று நான்கு கலப்புத் தம்பதிகள் மட்டுந்தான் அலங்காரம் செய்து கொண்டிருந்தார்கள்.

"Hej மல்லி" "Velkommen" எனச் செல்லமாக வரவேற்றாள். "VIL du gerne te eller Kaffe"....?

"ikke nu"... எனத் தலையசைத்தேன்.

"Jeg er meget travlt" மல்லி" மாலினி மெல்லென விலகிச் சென்றாள்.

"கோமெதே.... சணீப்ப..." குரல் வந்த திசை பார்த்துத் திரும்பினேன். கொஞ்சம் படித்த மனுசி.. சிறிமானாய் நீண்டுபருத்தும் முகச்சாயல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்களமொழியிலான சாதியுப்பு.

"கோமெதே" மருமி என்னைப் பார்த்து மீண்டும் கேட்டது. இடிகாலம் நின்றிருந்தேன். ஒன்றும் புரியாமலே Hvad siger du....?

மருமி முகம் சுருக்கினாள். திரும்பவும் கோமெதே சனீ......?

Hvad siger du...?

எனக்கும் ஒன்றும் புரியவில்லை, மருமிக்கும் ஒன்றும் புரியவில்லை.

"ஏய் மாலினி Kom her." அவசரப்பட்டுக் கூப்பிட்டேன். அவளும் என்னை நோக்கி வந்தாள். undskyld மல்லி det er min MOR hun kom til danmark i går.. என அறிமுகப் படுத்தினாள். மருமியைப் பார்த்துப் புன்னகை பூத்தேன்...

நான் அவள் தாயும் சங்கடப்பட்டதை மாலினிக்கு விபரித்தேன். விழுந்து விழுந்து சிரித்தாள் மாலினி.

"அம்மா இது நமோஸ் யாழ்ப்பாணம்" என அறிமுகம் செய்து வைத்தாள் என்னை.

நேற்றுத் தானே மருமியும் கொழும்பிலிருந்து வந்தது. அடிக்கடிச் செய்திகள் நிறையப் படிக்கும் எனக்குக் கேட்காலும் போல மிகவும் ஆவலாய் இருந்தது. ஆனால் அது என்றால் முடியாது. எனக்குச் சிங்களம் தெரியாது. மருமிக்கும் தமிழ் தெரியாது. எனக்கு தற்போது இருப்பது டெனிஸ் மொழி.. எனக்கு மருமி பதினெட்டு மாதமா போகுமேயும்....? எனக்கு மிகவும் கவலையாக இருந்தது.

மருமிக்கு என்ன தோன்றியதோ தெரியாது மாலினிக்கு என்னைக் காட்டி ஏதோ கேட்டது.

அவள் என்னைப் பார்த்து "வீட்டிலிருந்து கடிதங்கள் ஒழுங்காய் வருகின்றதா? என அம்மா கேட்கின்றா என்றாள் மாலினி என்னைப் பார்த்து.

இடைக்கிடை வரும்' என்று பதிலளித்தேன். மருமியின் முகத்தில் புன்னகை நிழலாடியது.

மருமி மீண்டும் அவளிடம் ஏதோ எனக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காதை சொல்லுகிறேன். மாலினி எனக்காக மீண்டும் மொழி பெயர்க்கிறாள்... "ஊரில் இப்போது சரியான பிரச்சினைகள் எந்த நேரம் என்ன நடக்கும் என்று ஒருவருக்கும் தெரியாது. எங்கும் ஒரே பதட்டமான நிலைதான்." என்றாள். எனக்கு வெளியிலாவது பிரச்சினைகள் விளங்கிக் கொண்டதி-ல் ஓரளவு திருப்தி.

மழலை சிரித்துச் சிரித்து ஏதோ ஏதோ சொல்லுகிறது. எனக்கு ஒன்றுமே புரியாமல் இருந்த-து. ஏதோ கொழும்பில் பஸ்ஸில் பிரயாணம் செய்வது போன்ற பிரமை.

மாலினி என்னைப் பார்த்துச் சிரித்துச் சிரித்து சொல்லுகிறாள். "நாங்கள் ஒரே நாட்டிலிருந்து இங்குவந்து சொந்த மொழிகளிலே சொந்தப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் இடையில் ஒரு அந்நியப் பாஷையின் உதவியினால் புரிந்து கொள்வதை நினைக்க நினைக்க அம்மாவுக்கும் சிரிப்பு வருகிறதாம்" என்றாள் மாலினி.

ஆனால் என்னால் சிரிக்க முடிய-வில்லை. எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. மாலினியோ-டு சிங்களத்தில் கதைத்திருந்தால் எப்படியிருந்திருக்கும். கேவலம் பிரத்தியேகமாக ஒரு மொழியை என்றால் படித்துக் கொள்ள முடியாமல்ப் போய்விட்டது. அதுவும் எமது நாட்டு மொழிகளில் ஒன்றான சிங்களத்தை...... ஒரு மொழியை நாம் பிரத்தியேகமாக தெரிந்து கொள்வதால் எமக்கு ஒன்றும் நட்டமேற்படப் போவதில்லை.

இந்த நாட்டில் அந்நிய மொழி-கள் குழந்தையிலிருந்தே படிப்பிக்கின்றார்கள். அங்கே எமக்கு இங்கிலீஷைப் படிப்பித்தது போல் சிங்களத்தையும், அவர்களு-க்குத் தமிழையும் ஏன் கற்பிக்க மறந்தார்களோ...... புதிர்கள். அரசியல்ப் பிரச்சினைகளோ அரசாங்கப் பிரச்சி-னைகளோ எதுவாக இருந்தாலும்.... நான் சிங்களம் பழக்காததையிட்டு மிகவும் வெட்கப்படுகின்றேன்.

சிறிய விடியற் Sprog skoleக்கு ஓடிப் போனதை இவைகளையும் நினைத்தவாறும் தேநீர் குடிக்கின்றேன்.

முற்றும்.

- மேனிறு

www.tamilarangam.net



# போராடும் குருடிஸ்த்தான் மக்கள்.

தமிழாக்கம்:- S.யோகேஸ்வரன்.

குர்திஸ்தானிய மக்கள் ஏறக்குறைய கி.மு 1000 ஆண்டளவில் "வன்" ஏரிக்கும் "யூர்மியா" ஏரிக்கும் இடையில் சென்று குடியேறினர். கி.மு 1000 - 612 க்கும் இடைப்பட்ட காலத்தில் அஸ்ஸீரியர்களுடன் போரிட்டு வெற்றியடைந்து "மெட் ஸோஸ்" என்ற அரசை அமைத்து வளமுடனும், வளர்ச்சியடைந்த ஒரு தனிப்பட்ட கலாச்சாரத்துடன் வாழ்ந்து வந்தனர். பல நாட்டவர்கள் வந்து இவர்களை ஆண்டதால் இவர்களது சுதந்திரமும் அதிகாரமும் நீடிக்கவில்லை. கி.மு 550-330 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஈரானியர் குர்திஸ்தானில் இருந்தனர். அதன் பின்னர் கிரேக்கர், மாசிடோனர், அமீனியர், ரோமானியப் பேரரசு, தார்த்தானியப் பேரரசு என்பவற்றாலும் குர்திஸ்தானியர் ஆளப்பட்டனர்.

"பூமியின் சுவர்க்கம்" என்றழைக்கப்படும் "மொசப்பத்தேமியா"வே குர்திஸ்தானியரின் தாய் நாடாகும். இது எப்பொழுதும் அன்னிய நாட்டவர்களாலேயே ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. அரேபிய வல்லாட்சியில் பிரபுத்துவமுறையுடன் குர்திஸ்தானில் இஸ்லாமிய மதம் பரவியது. பிரபுத்துவ ஆட்சியில் குர்திஸ்தானியர் மற்றைய சமயங்களிலும் ஆத்மீக ரீதியிலும் ஒதுக்கப்பட்டனர்.

கி.பி பதினோராம் நூற்றாண்டில் துருக்கியர்கள் குர்திஸ்தானை ஆக்கிரமித்தனர். 16ம் நூற்றாண்டில் துருக்கியர் [illegible]முறையைப் பாவித்து நாட்டைப் பெறமுடியவில்லை. ஆனால் 16ம் நூற்றாண்டின் பின் ஒஸ்மானியப் பேரரசு பரவி குர்திஸ்தானையும், கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் இடையில் வாழ்ந்த மக்களையும் ஆண்டனர். துருக்கிய ஒஸ்மானியர் மக்களை அடக்கி ஒடுக்க இஸ்லாமை உபயோகித்தனர்.

19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் முதலாளிய அமைப்புமுறை தொடங்கியது. ஆனால் ஒஸ்மானியர் தமது பிரபுத்துவ முறைமையையும், நாகரீக மற்றும் தந்திரங்களையும் தொடர்ந்து கடைப்பிடித்தமையால் அவர்களது பேரரசு சிதைவுற்றது. இக்கால கட்டத்தில் குர்திஸ்தானியர் பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாக்குதலை நடாத்தினர். ஆனால் அவர்களது தலைமைத்துவம் நிலப்பிரபுக்களைக் கொண்ட பிரபுத்துவமுறையைச் சார்ந்ததாக இருந்தது. முதலாவது உலகப் போரின் போது ஏகாதிபத்திய அரசுகள் உலகினைப் பல பிரிவுகளாகப் பிரிக்கப் போரிட்டனர். குர்திஸ்தான் பிரான்ஸ் நாட்டவர், ஆங்கிலேயர், துருக்கியர், ஈரானியர் இடையே நான்காகப் பிரிந்தது. இதன்பின் வடமேற்கு குர்திஸ்தானில் பல தாக்குதல்கள் நடைபெற்றன. இத்தாக்குதல்கள் யாவும் முறியடிக்கப்பட்டன. 1920ம் ஆண்டு துருக்கியர்களுக்கும், நேச நாடுகளுக்கும் இடையே பிரான்ஸ் தேசத்தில் 'செவராஸ்ஸில்' ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பின் பல மக்களுக்கு சுதந்திரம் கிடைத்தது. இவர்களில் குர்திஸ்தானியரும், ஆர்மீனியரும் அடங்குவர். 15-20 மில்லியன் குர்திஸ்தானியர்களுக்குப் புதிய நம்பிக்கை தோன்றியது.

ஆனாலும் குர்திஸ்தானியர் தங்களது நாட்டைப் பெறமுடியவில்லை. அது ஈரான், ஈராக், சிரியா, துருக்கி ஆகிய நாடுகளுக்கிடையே அகப்பட்டிருந்தது.

ஒஸ்மேனியப் பேரரசின் வீழ்ச்சியின் பின் துருக்கி தேசத்தில் துருக்கியத் தளபதி ஒருவர் தலைவர் ஆனார். அவர் தன்னை "அற்றாருயக்" துருக்கியரின் தந்தை எனப் பெயர் இட்டுக் கொண்டார். பல துருக்கியருக்கு இன்றும் அவர் நவீன துருக்கியின் ஸ்தாபகராகத் தோன்றுகிறார். ஆனால் அவருக்கு அளிக்கப்படும் கௌரவம் நாட்டின் சிறுபான்மையினருக்கு மிகவும் கடுமையாகத் தோன்றுகிறது. அவர் ஆர்மீனியர் மேல் படுகொலை மேற்கொண்டு இரத்தம் சிந்தச் செய்தார். 7.00.000 குர்திஸ்தானியரை அவர்களது சொந்தப் பிரதேசத்திலிருந்து இடம் பெயரச் செய்தார். (மேற்கு துருக்கிக்கு) 1923ம் ஆண்டு குர்திஸ்தானியரின் மொழியையும், இலக்கியத்தையும் தடை செய்து எல்லாப் பாடசாலைகளிலும் துருக்கிய மொழியை கற்பிக்க ஏற்பாடு செய்தார். இங்கு கவனிக்க வேண்டியதென்னவெனில் இரு மொழிகளும் இரு வேறுபட்ட மொழிக் குடும்பங்களைச் சார்ந்தவை. குர்திஸ்தானிய மொழி பழைய ஈரானிய மொழியின் குடும்பத்தைச் சார்ந்த இந்தோ- ஐரோப்பிய மொழியாகும். துருக்கிய அரசாங்கம் குர்திஸ்தானியரை மலையோரத் துருக்கியர் எனவும் அவர்கள் துருக்கிய மொழியை பேச மறந்துவிட்டனர் எனவும் கூறினர். அடக்குமுறை அதிகமாக இருந்தது. 1920க்கும் 1930க்கும் இடையில்

குர்திஸ்தானியர் பல தாக்குதல்களை நடாத்தினர். "அற்றாருயக்"கின் ஏதேச்சதிகார அரசின் கொள்கைகள் சிறு-பான்மையினர் அனைவரையும் துருக்கியராக மாற்றுவதும், நாட்டில் ஒரே ஒரு அதிகார வர்க்கம் இருக்க வேண்டுமென்பதாகும். இவ்வாறாக துருக்கியர் இன்று குர்திஸ்தானியருடன் இணைந்து குர்திஸ்தானியரின் மூலப் பொருட்களை பயன்படுத்த முயன்று வருகின்றனர்.

1970களில் குர்திஸ்தானில் தேசிய இயக்கம் வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து. பலர் அதில் தீவிரபங்கெடுத்தனர். ஆரம்பத்தில் துருக்கியர் குர்திஸ்தானியரின் போராட்டத்தை MARAS என்ற இடத்தில் 1000க்கும் மேற்பட்டடிக்களைக் கொன்று குவித்து போன்ற நடவடிக்கைகளால் பின் தங்கச் செய்தனர். குர்திஸ்தானியரின் தாக்குதல் ஏகாதிபத்திய நாடுகளால், எதிர்ப் பிரச்சாரப்போர் ஆரம்பிக்கப்பட்டது.

www.tamilarangam.net

இந்தப் போரின் நோக்கம் குர்திஸ்தானியரை முற்றாக அழித்தலாகும். இதற்கு உதாரணமாக HALEPCE (ஹலப்சா) வில் 1988ம் ஆண்டு 5000க்கு மேற்பட்ட குழந்தைகளும், முதியோரும் நச்சுவாயுவினால் படுகொலை செய்யப்பட்டனர்.

குர்திஸ்தானை அழிப்பதில் ஐரோப்பிய நாடுகள் எப்பொழுதும் தீவிர ஆதரவு காட்டி வந்துள்ளன. இந்தப் பிரச்சினைகள் ஆராயப்படும் போது ஜனநாயகத்தைப் பற்றியும், மனித உரிமைகள் பற்றியும் பேசுபவர்கள் குர்திஸ்தானில் நடக்கும் படுகொலைகளைப் பற்றி அறிந்தும் ஐரோப்பியர் மௌனமாக இருப்பது இவர்கள் அப்படுகொலைகளுக்கு ஆதரவளிப்பதாகும்.

நூறாயிரம் குர்திஸ்தானியர்கள் ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் பிரிந்து வாழ்கின்றார்கள். இவர்கள் சமூக, அரசியல், பொருளாதார காரணங்களாலே இங்கு வாழ்கின்றனர். இங்கு வாழும் குர்திஸ்தானியர்கள் தங்களது எதிர்காலம் பற்றிய எவ்வித தெளிவுமின்றி வாழ்கின்றனர். இந்தக் காரணங்களால் ஐரோப்பிய கலாச்சாரத்தின் மீது அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது. ஐரோப்பியரின் பிரபுத்துவ வாழ்க்கையும், இரண்டு, மூன்று தலைமுறைகளாக மனித உரிமைகளை அசட்டை செய்து வந்தமையாலும் பல குடும்பங்கள் துயரத்திற்குள்ளாகியுள்ளது. பிரச்சினைகளுக்கு எவ்வித பரிகாரமும் வழங்கப்படவில்லை. பதிலாக உண்மைகளை திரித்துக் கூறி வருகின்றனர்.

குர்திஸ்தானிய பிரச்சனைக்கு அடிமட்டத்திலிருந்து தீர்வு காணப்பட்டு, நாடு ஜனநாயகப் பாதையில் அடியெடுத்து வைத்தாலன்றி குர்திஸ்தானிய பிரச்சனைக்கு தீர்வு காணமுடியாது.

## கவிதை

### "அடிமைகள்".

கரிகாலன்
கட்டிவைத்தான்
கல்லணை
அவன்
கட்டியதால்
மாண்டவர்கள்
எத்தனை.

விடையாக
கேவலம்
சித்திரை
ஆற்றில்
விடிவதற்குள்
வாந்தியிடும்
கட்டணை.

புதியதாக
கட்டப்பட்ட
பழிப்புரை
அன்று
புண்பட்ட
நெஞ்சங்கள்
எத்தனை.

ஜொனி.
கொன்ஸலோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ET KÆMPENDE FOLK KURDERNE

Kurderne udvandrede ca. år 1000 f.k. og bosatte sig mellem VAN-og URMIYE søerne. Mellem år 1000 f.k. og år 612 f.k. kæmpede de mod Assyrerne og vandt. Herefter bosette kurderne sig fest. 600 f.k. Grundlagde de MEDERNES stat og blev et rigtigt folk med en udviklet selvstændigt kultur. Deres selvstendighed varede ikke lang tid. Mange folk kom og herskede over kurderne før år 550-330 var perserne i kurdistan. Herefter blev vi besat af Grækerne, Markedonerne, Armenerne. Det Romerske rig og de Tatariske rige.

Kurderne boede mellem øst og vest. Derfor blev "Jordens Paradis"- Mesopotamien, som var kurdernes moderland, altid besat af andre lande. På den ara biske halvø dukkede feudalismen op og med den en ny religion-Islam. Den bredte sig og "besatte" også Kurdistan. I slavesamfundet blev kurderne undertrykt materielt af andre folk, i Feudalismen blev de undertrykt åndeligt af religionen.

I det 11. århundrede kom tyrkerne og besatte deres land. Før det 16. århundrede kunne tyrkerne ikke undertrykke kurderne



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

rigtigt og få deres stat, men efter det 16. århundrede bredte det osmaniske rige sig og herskede over kurderne og mange andre folk mod øst og vest. De tyrkiske osmaner brugte islam til at undertrykke folk.

I det 19. Arhundrede startede den kapitalistalistiske fase i europa, men osmanerne fortsette med det feudale system og den barbariske taktik og deres rige gik derfor i opløsning. På denne tid gjorde kurderne mange oprør, men deres ledelse var feudal og bestod af godsejere. I 1, verdenskrig kæmpede de Imperialistiske stormagter om at dele verden mellem sig. Kurdistan blev delt i 4 dele mellem franskmænd, Englændere, Tyrkere og persere. Efter den tid var der mange oprør i Nordvestkurdistan, som blev brutalt slået tilbage.

Efter en fredsaftale mellem tyrkiet og de allierede, som blev underskrevet i SEVRES i frankrig i 1920, blev flere folk lovet selvstændighed, heriblandt kurderne og Armenerne. Et nyt håb tandtes i den 15-20 millioner store kurdiske befolkning.

Kurderne fik dog ikke deres land, der nu lå delt mellem 4 lande Iran, Irak, Syrien og Tyrkier.

I tyrkiet var en Tyrkisk general gjort til præsident efter det Osmaniske riges fald. Han gav sig selv Tilnavnet "Atatyrk" Tyrkernes fader. For mange Tyrkere står han stadig som det moderne Tyrkiets grundlægger, men prisen var særdeles hård for landets mange mindretal.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Han havde gennemført et blodbad på den Armeniske befolkning, og forvist 700.000 kurdere fra deres hjemegn til vesttyrkiet. I 1923 forbød han kurdisk sprog og litteratur, og alle skoler skulle undervisningen nu foregå på tyrkisk. Det ervær at bemærke, at de to sprog tilhører forskellige sprogfamilier, og at kurdisk er et Indoeuropæisk sprog i slægt med oldpersisk. Dog hævdede den tyrkiske regering,at kurderne var "Bjerg-tyrkere," der havde glemt at tale tyrkisk. Undertrykkelsen var massiv, og gennem 1920 erne og 30 erne gjorde kurderne oprør, som hver gang besvaredes med tvangsforflyttelser. Atatyrk's politik var klar, alle mindretal skulle gøres til tyrkere, der i hans faschistiske ideologi var et Herrefolk. På den måde forssøger tyrkerne også i dag at assimilere os og udnytte deres Råstoffer.

I dag kæmper kurderne i kurdistan under ledelse af det kurdistans Nationale Befrielsesfront- ERNK.


I 1970'erne udvikledes der en nationa befrielses bevegelse i Kurdistan og befolkningen har aktivt deltaget i bevægelsen. I begyndelsen besvarede den tyrkiske stat modstanden med massakrer som f.eks. i MARAS hvor over 1000 mennesker blev dræbt. Da modstanden ikke kunne forhindres blev der started en anti-propoganda krig mod K.N modstandsbevægelse fra de Imperialistiske lande, formålet var at tilintetgøre det kurdiske folk, sådan et eksempel blev oplevet i halepce i 1988, hvor over 5000 børn som ældre blev myrdet under giftgas angreb.

